# எங்கள் குரல்

குழந்தைகளின் இதழ்



April 2021, Volume:01

பயிற்சியும் பங்கேற்பும்



## ‘எங்கள் குரல்’ ஆசிரியர் குழு

**சுதா**
8வது, கீழ ஈரல், கோவில்பட்டி

**அகல்யா**
6வது, ஜவஹர்லால்புரம், மதுரை

**கன்னிராஜ்**
7வது, கீழ ஏரல், கோவில்பட்டி

**நாகார்ஜுன்**
7வது, அம்பேத்கர் காலனி, மதுரை

**அனுஷியா**
8வது, வள்ளுவர் நகர், கோவில்பட்டி

**மாரிசெல்வம்**
6வது, வள்ளுவர் நகர், கோவில்பட்டி

**நீலாவதி**
11வது, கூசாலிபட்டி-II, கோவில்பட்டி

**கவிப்பிரியா**
9வது, மீனாம்பாள்புரம், மதுரை

**தன பால குமார்**
10வது, விஸ்வநாத தாஸ் நகர், கோவில்பட்டி

**கவிதா**
8வது, புங்கவர்ணத்தம், கோவில்பட்டி

**கமலா ராணி**
6வது, கூசாலிப்பட்டி-I, கோவில்பட்டி

**தர்ஷினி**
9வது, மஞ்சநாயக்கன்பட்டி, கோவில்பட்டி

**வர்ஷினி**
6வது, மீனம்பாள்புரம், மதுரை

**பிரபாகரன்**
5வது, விஸ்வநாத தாஸ் நகர், கோவில்பட்டி

**அபிஷேக்**
5வது, ஜவஹர்லால்புரம், மதுரை

### வழிநடத்தல்

சின்னராஜ் ஜோசப் ஜெய்குமார்,
நிர்வாக அறங்காவலர்,சிடார் மதுரை
மைகேல், சிடார் கோவில்பட்டி
மாரிகண்ணன், சிடார் கோவில்பட்டி

### ஒருங்கினைப்பு

பாலகார்த்திகேயன், சிடார் மதுரை

### தமிழாக்கம்

தாவீது ராஜா, சிடார் மதுரை

# பொருளடக்கம்


1. பயிற்சி பட்டறை ........ (2)
   - 1.1 தொகுப்பு ........ (2)
   - 1.2 எனது அனுபவம் ........ (4)

2. சிடார் குழந்தைகள் வளமையம் ........ (5)
   - 2.1 குழந்தைகள் சங்கம் ........ (5)
   - 2.2 மாற்று கல்வி பயிற்சிமுறை ........ (6)

3. குழந்தைகளுக்கான ஓவிய பயிற்சிகள் ........ (8)
   - 3.1 என்னை கவர்ந்த ஓவியம் ........ (11)
   - 3.2 பயிற்சியில் எனது அனுபவம் ........ (11)

4. குழந்தைகளுக்கான நாடக பயிற்சிகள் ........ (12)

5. சிறப்பு நிகழ்சிகள் ........ (14)
   - 5.1 கோரோனவை சந்திப்போம் ........ (14)
     - 5.1.1 மதுரை ........ (14)
     - 5.1.2 தூத்துக்குடி ........ (16)
   - 5.2 குழந்தைகள் பாதுகாபிற்கான குழு கூடுகை ........ (19)
   - 5.3 பொங்கல் சிறப்பு நிகழ்சிகள் ........ (21)
   - 5.4 கல்வித்துறை அதிகாரியுடன் ஓர் உரையாடல் ........ (23)

# எங்கள் குரல் இதழ்



உலகில் மனிதர்கள் தோன்றி பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டது, இருப்பினும் அன்று முதல் இன்று வரை வாய்ப்பற்ற, வலுவற்ற குரலாகவே குழந்தைகளாகிய எங்கள் குரல், வீடுகளிலும், பள்ளிகளிலும், சமூகத்திலும் ஆதிக்கமுள்ளவர்களின் அடக்குமுறையில் அடங்கிவிடுகிறது. பள்ளிகளில் ஆசிரியரின் பிடியில், வீடுகளில் பெற்றோர்களின் பிடியில், சமூகத்தில் பெரியவர்களின் பிடியில் என்று எங்கள் சுதந்திரம் சுழன்று சுழன்று சுற்றுகிறது. ஏன் குழந்தைகளாகிய நாங்கள் சுதந்திரமாகச் செயல்படுவதற்கு உரிமை இல்லை? என்ற கேள்வி எங்களைப் போன்ற குழந்தைகளின் மனதில் தினந்தோறும் ஓடிகொண்டே இருக்கிறது. அதையும் அனுமதி கேட்டுத்தான் சொல்ல வேண்டுமோ? எங்களுக்கான சுதந்திரம் என்பது கருத்துக்களையும், சிந்தனைகளையும், படைப்புகளையும் சுதந்திரமாக இவ்வுலகிற்கு வெளிக்காட்டுவதே ஆகும். அதற்கான ஒரு முயற்சி தான் எங்கள் குரல் இதழ்! குழந்தைகளுக்கே உரிய சிறப்பு இதழ், பெரியவர்களாகிய உங்களையும் எங்கள் இதழை வாசிக்க அழைக்கிறோம்!



எங்கள் குரல் இதழ்

# பயிற்சி பட்டறை

## தொகுப்பு :

பள்ளியில் புத்தகம் வாசிப்பது என்பதை தாண்டிப் புத்தகம் உருவாக்குவது என்பது ஆச்சரியமும், அற்புதமும் தானே? இதே ஆச்சரியத்துடன் நாங்கள் தொகுப்பு பட்டறைக்குச் சென்றோம் எங்களை ஐந்து குழுக்களாகப் பிரித்துப் புத்தகம் உருவாக்குவதற்க்கு அடிப்படையான தகவல்கள் மற்றும் புத்தகம் வடிவமைத்தல் பற்றியும் பயிற்றுவிக்கப்பட்டது. எளிய முறையில் புரிய வைப்பதற்காக எழுது பலகையில் கண்களைக் கட்டிக்கொண்டு பெயர் எழுதிய இடத்தில் புள்ளி வைக்கச் சொன்னார்கள். அதனையே உதாரணமாக எடுத்துக் கொண்டு புத்தகம் எப்படி உருவாக்க வேண்டும் என்பதை புரிந்து கொண்டோம். பின்பு நாங்கள் தினசரி செயல் பாட்டில் வரைந்த ஓவியங்கள், கட்டுரைகள், கவிதைகள் அனைத்தையும் தனித்தனியாகப் பிரித்து அதில் உள்ளவற்றிலிருந்து எங்கள் குரல் இதழுக்காகத் தேர்வு செய்தோம்.

- ஆ. அனுஷியா, வகுப்பு-7,

தாமஸ்நகர்- I, சிடார் குழந்தைகள் வள மையம்.

# பயிற்சி பட்டறை



பயிற்சியாளர்: முனைவர் திரு. சின்னராஜ் ஜோசப் ஜெய்குமார்,

மேலாண்மை அறங்காவலர், சிடார், மதுரை.





இடம்: சிடார் அலுவலகம் நாள்: 18.02.2021

# எனது அனுபவம்:

நான் பெரும்பாலும் வெளியிடங்களுக்கு போவதில்லை அப்படியே சென்றாலும் பெற்றோரின் பாதுகாப்பிலே செல்வதுண்டு. ஆனால் இந்தப் பயிற்சி பட்டறைக்கு எனது வள மைய குழந்தைகளுடன் வந்தது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. இங்கு மற்ற மையத்திலிருந்து நிறைய குழந்தைகள் வந்து இருந்தனர், மூன்று எழுத்துக் கவிதை ஒன்று கேட்டார்கள். 'அம்மா ' என்று கூறியதற்கு ஓவிய புத்தகம் எனக்குப் பரிசாகக் கிடைத்தது, ஒன்று முதல் நூறு வரை யார் விரைவாக எழுதுவார்கள் என்ற போட்டி நடைபெற்றது. பின்பு ஒரு புத்தகத்தை எப்படி தயாரிக்க வேண்டும் என்று கற்றுக்கொடுத்தார்கள், புத்தகங்களில்அணனைத்துப் பக்கங்களும் ஒரே அளவில் இருக்க வேண்டும் என்றும், ஒரு புத்தகத்தை உருவாக்குவதற்கு தேவையான மூன்று விஷயங்களைக் கற்றுக்கொண்டோம். அனைவரும் குழந்தை பருவத்தில் கிறுக்கத்தான் செய்திருப்போம் அதுபோல ஒரு தாளில் கிறுக்கச்சொன்னார்கள். பிறகு அனைவரையும் கதை எழுதச் சொன்னார்கள். அதில் உள்ள நீதியை பற்றிப் பேசினோம் அதன் முக்கியத்தினை பற்றியும் விவாதித்தோம். பின், அதுபோலத் தான் நாங்கள் தயாரிக்கும் புத்தகத்திலும் இருக்க வேண்டும் என்பதை தெரிந்துக் கொண்டோம்.



- V. நீலாவதி, வகுப்பு-12,
கூசாலிப்பட்டி, சிடார் குழந்தைகள் வள மையம்



சிடார் குழந்தைகள்

# வளமையம்

குழந்தைகள் வளமையம் என்பது பள்ளி முடிந்த மாலை நேரங்களிலும், மற்ற விடுமுறை நாட்களிலும் குழந்தைகள் அனைவரும் ஒன்றுக்கூடி தங்களின் படைப்பாற்றலையும், தனித்திறமைகளையும் வெளிக்கொண்டுவருவதற்கும், பயில்வதற்க்கும் தங்களின் பிரச்சனைகளையும், தேவைகளையும் பேசுவதற்குமான ஓர் தளம் தான் குழந்தை வள மையங்கள். அவை இரண்டு முக்கிய அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.




## குழந்தைகள் சங்கம்:

எங்களுக்குச் சங்கம் வேண்டுமா? அதெல்லாம் பெரியவங்களுக்குதானே? சின்னக் குழந்தைங்க நமக்கு எதுக்கு அப்படின்னு தான் நாங்களும் முதல்ல யோசிச்சோம். அப்பறம் தான் ஆண்களுக்குனு ஒரு சங்கம் இருக்கு, பெண்களுக்குனு ஒரு சங்கம் இருக்கு, அப்ப ஏன் எங்களுக்கு இருக்க கூடாதுன்னு யோசிச்சோம். அப்போது தான் சிடார் குழந்தைகள் வள மையம் மூலமா குழந்தைகளுக்கான சங்கத்தைப் பற்றித் தெரிஞ்சுக்கிட்டோம்.

அதில் அனைத்து குழந்தைகளிடமிருந்து ஆலோசனைகள் கேட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். மேலும் கிராமங்களில் நடைபெறும் கிராம சபை கூட்டத்தில் குழந்தைகள் சங்கம் சார்பாகக் குழந்தைகளிடமிருந்து கேட்கப்பட்ட தேவைகளை மனுவாக எழுதிக் கிராம சபை கூட்டத்தின்போது கோரிக்கையாக வைக்க முடிந்தது. எங்கள் குழந்தைகள் சங்கம் கூட்டத்தில் உறுதிமொழி எடுத்தல், தொடக்கபாடல், திறமைகளை வெளிகாட்டுதல் தீர்மானம் நிறைவேற்றுதல் போன்றவை முக்கிய அம்சங்களாகும்.

- தாரணி, கு. மகாலட்சுமி, சுதா, கார்த்திகா தேவி.

சிடார் குழந்தைகள் வள மையம்

## மாற்றுக் கல்வி பயிற்று முறை:

எங்கள் சிடார் வள மையத்தில் படிப்பதை தாண்டிச் சில செயல்பாடுகள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

### திங்கள்கிழமை அன்று செய்தித்தாள் வாசித்தல் -

தொலைக்காட்சியிலிருந்தோ, செய்தித்தாள்களிலிருந்தோ செய்திகளைச் சேகரித்து அதனை மையத்தில் குழந்தைகளுக்குத் தெரிவிப்போம். பின் முக்கியச் செய்திகளை வெட்டிச் சேகரித்தும் வைப்போம்.

### செவ்வாய்கிழமைகளில் கதை சொல்லுதல் -

பள்ளியில் படித்த கதைகள், தானாகச் சிந்தித்த கதைகள், மற்றவர்களிடம் கேட்டறிந்த கதைகள் போன்றவற்றை கூறுவோம். பின்பு கதையினை கலந்தாய்வு செய்வோம்.

### புதன்கிழமை அன்று சுற்றுபுறத் தூய்மை -

எங்கள் சிடார் வள மையத்தில் அனைத்து குழந்தைகளும் சேர்ந்து எங்கள் மையம் மற்றும் அதன் சுற்றி உள்ள இடத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்வோம். மேலும் மக்கும் குப்பை, மக்காத குப்பை, நெகிழியின் தீமைகள் பற்றி மற்றவர்களுக்கு எடுத்துரைப்போம்.

வியாழக்கிழமை அன்று ஓவியம் வரைதல் -
குழந்தைகள் தங்களுக்கு பிடித்த ஓவியங்களைப் பென்சில் கலர், வாட்டர் கலர், போஸ்டல் கலர் போன்றவற்றைக் கொண்டு வரைந்து, ஓவியப் பயிற்சி முகாமின்போது ஓவிய ஆசிரியரிடம் காட்டுவோம் பின்பு அங்குக் கற்றுக்கொண்டதை மற்ற குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுப்போம்.

வெள்ளிக்கிழமை - அன்று உள் மற்றும் வெளி அரங்க விளையாட்டுகளான சதுரங்கம், கொக்கோ, எறிபந்து, ஸ்கிப்பிங் போன்ற விளையாட்டுகளை மகிழ்ச்சியுடன் விளையாடுவோம். ஆறு முதல் பத்து வயது வரை உள்ள குழந்தைகள் அவர்களுக்குப் பிடித்த விளையாட்டுக்களை விளையாடுவார்கள்.

சனிக்கிழமை - அன்று செய்தித்தாள் மற்றும் கலர் பேப்பரில் கைவினை பொருட்கள் செய்து மற்றக் குழந்தைகளுக்கும் கற்றுக்கொடுப்போம். பின்பு சிறிய உடற்பயிற்சி செய்வோம், பாடல், நாடகம், ஒயிலாட்ட பயிற்சி செய்வோம். எங்கள் சிடார் வள மையத்தில் படிப்பை முடித்தபிறகு தினமும் ஒரு மணி நேரம் ஒதுக்கி இது போன்ற செயல்பாடுகளை நாங்கள் செய்து வருகிறோம்.

- சொர்ணதேவி, சுஜிதா, பிரார்த்தனா, ஆவுடை செல்வி.
சிடார் குழந்தைகள் வள மையம்



# குழந்தைகளுக்கான ஓவிய பயிற்சிகள்

யாருக்கு தான் வரைய பிடிக்காது சொல்லுங்க பாப்போம்? அந்தப் பிரஸ்ஷ எடுத்துப் பெயிண்ட்ல முக்கிப் பேப்பர்ல இழுத்தோம்னா எவ்வளவு அழகா இருக்கும்! சொல்லும் போதே மனசுக்குள்ள படம் வரைய ஆரம்பிச்சுருப்பிங்கனு நினைக்கிறேன். கலை என்பது அதுதானே? நம் வாழ்வியலின் ஒன்றோடு ஒன்றாக இணைந்து, நம் சிந்தனைகளை வெளிக்கொண்டு வருவதே கலையின் முக்கிய அம்சம் தானே. ஓவியக்கலையும் நம்ம மனதில் புதைந்துள்ள சொல்ல விரும்பிய விஷயத்தையும் படைப்பாற்றலையும் இவ்வுலகிற்கு வெளிக்கொண்டுவருவதில் முக்கிய பங்கு வகிக்கிறது இல்லையா? அதிலும் எங்களோட மன வளர்ச்சியையும், கற்பனைத் திறனையும், படைப்பாற்றலையும், எங்களுக்கான தனித்துவத்தையும் வளர்ப்பதில் ஓவியக் கலைக்கு முக்கிய பங்குண்டு. ஆனா பெயிண்ட், பிரஸ், பேப்பர் இதெல்லாம் எப்படி வாங்குறது? வீட்ல கேட்டா அம்மா காசு இல்லன்னு சொல்லுவாங்க. எல்லாருமே எப்படா சனி ஞாயிறு வரும்னு காத்துட்டு இருப்போம். அப்பதான் ஓவியப்பயிற்சி முகாம் நடக்கும். எங்களுக்கு என்ன படம் வரையத் தோணுதோ, அதுக்கு என்ன கலர் குடுக்கனும்னு தோணுதோ குடுப்போம். அந்தப் பயிற்சியே ஒரே வண்ணமயமா இருக்கும். எல்லாருமே சுத்தி இருக்குற எல்லாத்தையும் மறந்து வரைரதுலதான் ஆர்வமா இருப்போம்.



# என்னைக் கவர்ந்த ஓவியம்

நான் என் புத்தகத்தில் ஒரு படத்தைப் பார்த்தேன், அது என்ன படம் என்றால் ஒரு அழகிய மரம் அதில் வரையப்பட்டிருந்தது, அந்த மரம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதைப் பார்த்தவுடன் எனக்கு ஒரு உணர்வு வந்தது, அந்தப் படத்தை வரைய வேண்டும் என்று தீர்மானித்தேன். பிறகு அந்தப் படத்தை வரைந்தேன், பின்பு அந்தப் படத்திற்கு வண்ணம் கொடுத்தேன்.

- ஆ. அனுஸ்ரீ, வகுப்பு-4,
தாமஸ்நகர், சிடார் குழந்தைகள் வளமையம்

# பயிற்சியில் எனது அனுபவம்

நான் ஓவியப் பயிற்சியில் சேர்ந்தபொழுது எனக்கு மிகவும் பயமாக இருந்தது, நான் முதல் முதலில் பயிற்சிக்குச் சேர்ந்தபோது, குணா சார் எனக்குத் தொப்பி செய்யச் சொல்லிக் கொடுத்தார். அந்த முதல் பயிற்சியில், நான் அழகாக வரைவதாகவும் கூறினார். நான் இரண்டாம் நாள் பயிற்சிக்குச் சென்றபோது கப்பில், சூரியகாந்தி பூ செய்ய சொல்லிக் கொடுத்தார். சார், ஒன்று சொன்னார் நீ மட்டும் ஓவியம் கற்றால் போதாது அதை அனைவருக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும் என்றார். ஒரு நாள், குணா சார் அவர் அண்ணன் வரைந்ததை பயிற்சிக்குக் கொண்டு வந்தார். அதில் நான் வண்ணம் தீட்டி மகிழ்ந்தேன். நாகராஜ் சார், கப்பில் சேவல் செய்ய சொல்லிக் கொடுத்தார். எனக்கு ஓவியம் கற்றுக் கொடுத்த குணா சார் மற்றும் நாகராஜ் சார்க்கும் நன்றி.

- சு. அம்சவேல்த்தாய், வகுப்பு-6,
சிடார் குழந்தைகள் வளமையம், மஞ்சநாயக்கன்பட்டி



# எங்களுக்கான நாடகப் பயிற்சிகள்



நாடகம்னு சொன்னா நமக்கு ஞாபகம் வருவது தொலைக்காட்சில வர நாடகம் தான்னு நினச்சிங்களா? அது தான் இல்ல, சின்ன வயசுல உங்க ஊர்ல எல்லாரும் ஒண்ணா சேர்ந்து வரலாற்றுக் கதைகளை நாடகமா நடிச்சு காட்டுவாங்க. அந்த நாடகத்தப்பத்தி தான் சொல்றோம். இப்பல்லாம் யார் சார் நாடகம்லாம் பாக்குறாங்க?. எல்லார் கைலயும் மொபைல் போன் தான். எங்களுக்கும் ஆசை இருந்துச்சு நாங்களும் எல்லார் முன்னாடியும் நடிச்சு காமிக்கனும்னு ஒரு ஆசை இருந்துச்சு. அதுவும் நாங்களே கதை எழுதி அதுல நடிக்கனும்னு. ஆனா எதையும் முறையா கத்துக்குட்டாதான சரியா செய்ய முடியும். அப்ப தான் சிடார் குழந்தைகள் வள மையத்துல நாடகம் நடிக்க யாருக்கெல்லாம் விருப்பமோ அவுங்கெல்லாம் வரலாம்னு, கதை உருவாக்குதல், கதாபாத்திரங்கள், காட்சிகள், ஆடைகள் போன்றவை எப்படி நாடகத்திற்கு ஏற்றார்போல இருக்க வேண்டும் என்பதை அங்க தான் நாங்க தெரிஞ்சுகிட்டோம். நாங்க கூட நாடகம் நடிக்கிறது சுலபமான விசயம்னு நினைச்சோம். ஆனா நாடகத்துல இருக்கிற நுணுக்கமான விசயங்களையும் அழகா சொல்லிக் கொடுத்தாங்க. அங்க பழகனதுகப்பறம்தான் நாங்களே எந்த நிகழ்ச்சினாலும் நாங்களே முன்வந்து கதை எழுதி நடிக்கவும் செஞ்சு எல்லார்கிட்டையும் பாராட்டுக்களும் வாங்கினோம்.

# நாடகம்



பயிற்சியாளர்: செல்வம், நாடக ஆசிரியார், சிடார்.





# சிறப்பு நிகழ்சிகள்

## 1. கொரோனாவைச் சந்திப்போம்

(குழந்தைகள் சமூக, கலை செயல்பாட்டுக் கையேடு வெளியீட்டு நிகழ்ச்சி)



* மதுரை - காந்தி நினைவு அருங்காட்சியகம்

கொரோனா பேரிடர் காலத்தில எப்படி நம்மள பாதுகப்பா வச்சுக்கணும் குறிப்பா குழந்தைகள எப்படி கொரோனா தொற்று ஏற்படாம பாத்துக்கனும் அப்படிங்கறதுல அரசும் சரி பொதுமக்களும் ரொம்ப விழிப்புணர்வா இருந்தாங்க. அப்ப தான் எங்க சிடார்ல எல்லார்க்கும் விழிப்புணர்வு எற்படுத்துவதற்க்காகக் கொரோனாவைச் சந்திப்போம்! என்ற கலைக்கையேடு வெளியீட்டு நிகழ்ச்சி 31 ஆகஸ்ட்டு 2021 அன்று மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகத்தில், மதுரை மாவட்ட ஆட்சியர் திரு. அனீஸ் சேகர், மதுரை மாவட்ட குழந்தைகள் நலக்குழு தலைவர் மரு. விஜயசரவணன், மதுரை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு. கணேசன், சிடார் மேலாண்மை அறங்காவலர் முனைவர். சின்னராஜ் ஜோசப் ஜெய்குமார் மற்றும் சிடார் அறங்காவலர் மரு. நவமணி அன்புநாதன் அவர்களின் முன்னிலையில் நடைப்பெற்றது அதில் பொதுமக்களுக்குக் கொரோனாவை எதிர்கொள்வது குறித்து நாடகம் ஒன்றை நாங்கள் அரங்கேற்றினோம். கொரோனா வைரஸ் மற்றும் நோய் தடுப்பு ஊசி போடுவதின் முக்கியத்துவத்தை நாடகம் வாயிலாக அனைவருக்கும் நடித்துக் காட்டியது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை தந்தது.


சிடார் - பேப்பர்போட் - ஆகஸ்ட் 31-2021 - மதுரை
கொரோனாவை சந்திப்போம் குழந்தைகள்
விழி


சிடார் - பேப்பர்போட் - ஆகஸ்ட் 31-2021 - மதுரை
கொரோனாவை சந்திப்போம் குழந்தைகள்


ஆகஸ்ட் 31-2021 - மதுரை
விழி
எண்ணும் எழுத்தும்
கண்ணெனத் தகும்
அறிவோம் அறிவியலை
அ.ஆ.இ.ஈ. A.B.C.D
1.2.3.4.5.6

## * தூத்துக்குடி - எட்டயபுரம்




கொரோனா வந்தது வந்துச்சு எல்லாரும் வீட்டுக்குள்ளேயே முடங்கியாச்சு. ஸ்கூல் இல்ல, வெளிய போக முடியாது எவ்வளவு நாளைக்கு தான் டிவி பாக்குறது, இப்ப நினச்சாலே ஒரே போர். உங்களுக்கும் அப்படி தான இருந்துச்சு? என்ன பண்றதுன்னு யோசிச்சப்பதான் சிடார் மூலமா குழந்தைகளுக்குக் கலை செயல்பாட்டு கையேடு ஒன்றினை உருவாக்குனாங்க அத எங்க ஊரு எட்டயபுரத்தில் உள்ள பாரதியார் மணிமண்டபத்தில் கையேடு வெளியீட்டு நிகழ்ச்சி நடந்துச்சு அப்ப எங்க குழந்தைகள் வள மையம் சார்பாக நடைபெற்ற குழந்தைகள் சமூக கலை செயல்பாட்டுக் கையேடு வெளியீட்டு விழாவில் தூத்துக்குடி துணை மாவட்ட ஆட்சியர் திரு. ஸ்ருதன் ஜெய நாராயணன் மற்றும் சிடார் மேலாண்மை அறங்காவலர் முனைவர். சின்னராஜ் ஜோசப் ஜெய்குமார் அவர்களின் முன்னிலையில் பறை இசை, கொரோனா விழிப்புணர்வு நாடகம், கோலாட்டம், கிராமிய நடனம், போன்ற கலை திறமைகளை நாங்கள் அரங்கேற்றினோம் அது மட்டும் இல்ல நாங்க வரஞ்ச ஓவியம் மற்றும் நாங்க எடுத்த புகைப்படங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்துச்சு அதனைத் துணை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு எங்களுக்குப் பாராட்டுக்களையும் தெரிவிச்சாங்க.











CEDAR



# 2. குழந்தைகள் பாதுகாப்பிற்கான குழு கூடுகை

எங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை உறுதிசெய்யும் விதமாக மூன்று மாதத்திற்கு ஒரு முறை குழந்தைகள் பாதுகாப்புக் குழு கூட்டம் சிடார் தொண்டு நிறுவனத்தின் அலுவலகத்தில் நடைபெறும் அதில் குழந்தைகள், பாதுகாப்புக் குழுவின் தலைவர், உறுப்பினர்களாக, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்திலிருந்து பணியாளர்கள் மற்றும் குழந்தைகள் நலப்பணி சார்ந்தஅரசு அலுவலர், குழந்தைகளின் பிரதிநிதிகளாக குழந்தைகள் சங்கத்திலிருந்து குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு குறித்த பிரச்சனைகளை பற்றியும், குழந்தை கடத்தல், பாலியல் துன்புறுத்தல்கள், மனம் மற்றும் உடல் ரீதியான துன்புறுத்தல்கள் போன்ற குழந்தைகளுக்கு எதிரான தீங்கிழைத்தல்கள் பற்றி தெரிய வந்தால் அதனை சரிசெய்து தீர்வை நோக்கி நகர்த்துவதற்கு சிடார் குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டு அதற்கான தீர்வினை குழந்தைகளுக்கான அரசு சார்ந்த உதவி மையம் மூலம் முன்னெடுப்பதில் சிடார் குழந்தைகள் பாதுகாப்பு குழு முக்கிய பங்கு வகிக்கிறது. அதை தொடர்ந்து 02 அக்டோபர் மாதம்  2021 வது வருடம் நடைபெற்ற சிடார் குழந்தைகள் பாதுகாப்புக் குழு கூட்டத்தில் தலைவர் திருமிகு பா. ராஜதுரைஅவர்களும் குழந்தை கன்னி ராஜ், குழந்தை மீனா மற்றும் குழந்தை நீலாவதி அவர்களும் மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கத்திலிருந்து திருமிகு சரத் அவர்களும் மற்றும் பெற்றோர்களும் மற்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு குழந்தைகளின் பிரச்சனைகள் குறித்து ஆலோசித்தோம்

- து. கன்னிராஜ், **வகுப்பு-8,**

**கீழஈரால்-1, சிடார் குழந்தைகள் வள மையம்.**









## 3. பொங்கல் சிறப்பு நிகழ்ச்சி

**சிடார் வளமைய குழந்தைகள் ஜனவரி மாதம் ஜவஹர்லால்புரத்தில் நடைபெற்ற பொங்கல் நிகழ்ச்சியில் தங்களின் கலை திறமைகளைப் பெற்றோர்களுக்கும், ஊர்மக்களுக்கும், சிறப்பு விருந்தினர்களுக்கும் வெளிக்காட்டினர்.**



மண் பார்த்துத் தலை கவிழ்ந்து நிற்கும் நெல்லம்மா!
உன் வெட்கத்தின் விலை என்னவென்று எங்களுக்குச் சொல்லம்மா !
புது நெல் குத்தி புதுப்பானை எடுத்து வந்த செல்லம்மா!
தைத்திங்கள் முதல் தேதி தைப்பொங்கல் என்று வந்ததம்மா!

ஆதவன் கிழக்கில் கண் விழித்து இருக்க
மாதவன் ஆன மாமனவன் அருகில் இருக்க
மாது அவள் வெள்ளம் கலந்து பொங்கலிட
ஜாதி, மதம் பேதமின்றி அனைவரும் கொண்டாடுவோம் பொன்னம்மா!
பொங்கியது பொங்கல் மட்டும் அல்ல கண்ணம்மா
நம் அனைவருடைய உள்ளமும்தான் சின்னம்மா.

- எம். இசக்கிமுத்து, வகுப்பு-6,
விஸ்வநாததாஸ் நகர், சிடார் குழந்தைகள் வள மையம்










"சிடார்" குழந்தைகள் கொண்டாட்
பேப்பர் போட் 2021







# 4. மதுரை மாவட்ட கல்வித்துறை அதிகாரியுடன் ஓர் உரையாடல்



**அறிமுகம்:** எல்லாரும் எப்படி இருக்கீங்க?

என் பெயர் திருஞானம் - கல்வித்துறையில் வேலை பார்க்கிறேன். நீங்கள் அனைவரும் சிடார்-லியிருந்து வந்துள்ளீர்கள், ரொம்ப சந்தோஷம்; பள்ளிகள் திறக்காத இந்தக் காலத்தில், வீட்டில் என்ன செய்தீர்கள்? இந்த COVID-யை கடந்து செல்லவும், கல்வியை தொடரவும் உங்களது தேவை என்ன என்பதை பற்றிப் பகிர்ந்து கொள்ளுவோம்.

நீங்கள் அனைவரும் வெவ்வேறு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களாக வந்துள்ளீர்கள் என்பதை அறிவேன், மேலும் தொடக்க கல்வி பயிலும் மாணவர்களாக இருக்குறீர்கள். உங்களது கல்வியை தொடருவது தொடர்பான யோசனைகளை முன் வைத்துக் கேள்விகளை எழுப்பலாம்.

**குழந்தைகள் : கொரானா காலத்தில் கல்வியை எவ்வாறு எதிர்கொள்வது?**

அரசு சார்ந்த மற்றும் தனியார் பள்ளிகளிடையே வெவ்வேறு வகையான செயல் திட்டம் வைத்துள்ளார்கள். தனியார் பள்ளிகளில் ஆன்லைன்(online) வகுப்புகள் மூலமாகக் கல்வியை தொடர்கிறார்கள் ஆனால் அரசு பள்ளிகளில் இதைச் செயல் படுத்த முடியாது. காரணம் இங்கே படிக்கும் பெரும்பாலான மாணவர்களின் பெற்றோர் வறுமை கோட்டிற்கு கீழே வசிப்பவர்கள், இதற்காக அரசு எடுத்த நடவடிக்கை தான் கல்வி தொலைக்காட்சி.

குழந்தைகள் : இதற்கான மாற்று திட்டம் என்ன?

ஆசிரியர் : குறிப்பாக மதுரை மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் DO AND DROP SYSTEM - கொண்டுவந்துள்ளார்கள். பள்ளிகளில் உள்ள வராண்டாக்களில் வகுப்பு வாரியாகத் தனித் தனியாகப் பெட்டிகள் வைக்கப்பட்டிருக்கும், ஒவ்வொரு மாணவர்களுக்கும் HOME WORK NOTE கொடுக்குப்பட்டு, அந்தந்த பாடங்கள் வாரியாக HOME WORK-வும் கொடுத்து, அதைப் பூர்த்தி செய்து குறிப்பிட்ட நாட்களில் வந்து பெட்டிகளில் வைத்துச் செல்லுமாறு நடைமுறைப்படுத்தபட்டுள்ளது.

குழந்தைகள் : மீண்டும் பள்ளிகள் திறக்கும்போது, வகுப்பறைகள் எவ்வாறு இருக்க வேண்டும்?.

ஆசிரியர் : சுகாதாரம் சம்பந்தப்பட்ட கேள்வி, பள்ளிகளில் உள்ள அனைத்து வகுப்பறைகளும் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு, சுத்தமாகவும் அதே நேரத்தில் சமூக இடைவெளியுடன் கூடிய வகுப்புகள் நடத்தப்பட வேண்டும். அரசுப் பள்ளிகளுக்கும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் தேவையான கிருமிநாசினி மற்றும் வெப்பமானி சோதனைக் கருவி (thermometer), முகக்கவசம் (mask)இவை அனைத்தும் அரசு சார்பாக வழங்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் : ஆன்லைன் கல்வியானது, வசதியற்ற மாணவர்களுக்கு எவ்வாறு சாத்தியப்படும்?.

ஆசிரியர் : சாத்தியமற்றது தான், நமது அரசு கொண்டு வந்த மாற்றுத் திட்டம் தான் கல்வி தொலைக்காட்சி. அனைவரது வீட்டிலும் தொலைக்காட்சி இருப்பதால் இது சாத்தியம்தான். மேலும் நமது அரசு, அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில் (DATA CARD) தரவு அட்டையை இலவசமாக வழங்க வேண்டும்.

குழந்தைகள் : பள்ளிகளில் புத்தகம் கொடுக்கும்போது, ஆன்லைன் கல்விக்கு தயாராகும்படி சொன்னார்கள், ஆனால் எங்களிடம் அதற்கான செல்போன், லேப்டாப் போன்ற சாதனங்கள் இல்லை. என்ன செய்வது?

ஆசிரியர் : உங்களுடைய கல்வியை தகவல் தொழிநுட்பத்திற்கு எடுத்துச் செல்லும்போது, அரசு அதற்கான சாதனங்களை உடன் வழங்க வேண்டும். இந்தக் கோரிக்கையை அரசுக்கு, நான் உறுதியாகக் கொண்டு செல்வேன்.

குழந்தைகள் : எங்களின் உரிமைகளும், உரிமை மீறல்களும் எந்த இடத்தில் நடப்பதாக நினைக்கீறீர்கள்?

ஆசிரியர் : உங்களுக்கான உரிமையானது பள்ளிகளிலும், வீடுகளிலும் மற்றும் பொது சமூக இடத்திலும் உள்ளது. அடிப்படை வசதியில்லாத பள்ளிகளில் படிக்க வைப்பது, தனக்கு பிடிக்காத துறை சார்ந்த கல்வியை படிக்கவைப்பது இது போன்றவையும் உரிமை மீறல்கள் தான். "குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் குழந்தைகள் உரிமை" என்ற அமைப்பு உள்ளது. இது எவ்வாறு செயல்படுகிறது? இதில் யார் யார் உறுப்பினர்கள்? மேலும் இதை எவ்வாறு அனுகுவது? சமூகத்தில் இவர்களின் பங்களிப்பு என்ன? என்பன போன்ற கேள்விகள் உங்களுக்கு எழலாம், இதற்கான பதில் தற்போது நீங்கள் இணைந்து இயங்கிகொண்டிருக்கிற சிடார் நிறுவனத்தில் வேலை பார்க்கும் அண்ணன்மார்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். பெரும்பாலான பள்ளிகளில் இலக்கியம் மன்றம், பெற்றோர் கூட்டமைப்பு, ஆசிரியர் சங்கம் போன்ற அமைப்புகள் உள்ளன. ஆனால் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் உரிமைக்கான அமைப்பு அங்குச் செயல்படுவதில்லை. நீங்களும் சிடார் போன்ற அமைப்புகளும் தான் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.

குழந்தைகள் : மற்றும் 11-ம் வகுப்புக்குத் தேர்வு நடத்தவில்லை ஆனால் +2 க்கு மட்டும் நடத்தியது ஏன்?

ஆசிரியர் : இந்த மூன்று வகுப்பும் +2 க்குள் தான் வருகிறது. ஆனால் +2 வகுப்பானது நாம் அடுத்து உயர் கல்வி பயிலுவதற்கும் பல்வேறு துறை சார்ந்த படிப்புகளுக்காகப் பிற மாநில மற்றும் வெளிநாடுகளுக்கும் செல்ல வேண்டியுள்ளதால், கட்டாயமாக +2 தேர்வு எழுதித்தான் ஆக வேண்டும்.

குழந்தைகள் : மறுபடியும் பள்ளிகள் திறக்கும்போது, சில மாணவர்களால் குடும்ப சூழல் காரணமாக வரமுடியாத நிலை ஏற்படும். அதை எவ்வாறு எதிர் கொள்வது?

ஆசிரியர் : அரசுக்கு முன் இருக்கக்கூடிய மிகப்பெரிய சவால் இதுதான். பெற்றோர்கள் போதிய வருமானமின்றி தவிப்பதால், இதை அறிந்த பெரிய அண்ணன், அக்காமார்கள் [9, 10, 11 std] தங்களது பூர்வீக ஊர்களுக்கும், வேலை நிமித்தமாக வேறு இடத்திலும் இருக்கிறார்கள். மீண்டும் பள்ளிகள் திறக்கும்போது, ஏற்கனவே நம்முடன் படித்த மாணவர்கள் எத்தனை பேர் இருப்பார்கள் என்பது கேள்விக்குறியே. ஆகையால் அனைத்து மாணவர்களும் வருகைக்கான முயற்சியை அரசு எடுக்க வேண்டும்.

குழந்தைகள் : ஆன்லைன் கல்வியானது, வகுப்பறையில் நடத்தும் கல்வி போன்று இல்லையே ஏன்?

ஆசிரியர் : உண்மைதான், தற்போது நான் உங்களுடன் கூட அமர்ந்து பேசிக்கொண்டும், நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கும் பதில் சொல்லிக்கொண்டும் இருக்கிறேன். இதுவே நான், டிவி(TV) நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அதன் வாயிலாகப் பேசும் உரையாடல் எவ்வாறு இருக்கும்? (மாணவர்கள்; இதுதான் நல்லா இருக்கு) ...சரி ...சரி. இரத்தமும், சதையுமாகக் கலந்த மனித உணர்வுகள், வகுப்பறையில் நேரடியாகக் கிடைக்கும். தற்போதைய சுழலில் ஆன்லைன் கல்வியே பாதுகாப்பானது.

குழந்தைகள் : ஆன்லைன் கல்வியானது, வகுப்பறையில் நடத்தும் கல்வி போன்று இல்லையே ஏன்?

ஆசிரியர் : உண்மைதான், தற்போது நான் உங்களுடன் கூட அமர்ந்து பேசிக்கொண்டும், நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கும் பதில் சொல்லிக்கொண்டும் இருக்கிறேன். இதுவே நான், டிவி(TV) நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அதன் வாயிலாகப் பேசும் உரையாடல் எவ்வாறு இருக்கும்? (மாணவர்கள்; இதுதான் நல்லா இருக்கு) ...சரி ...சரி. இரத்தமும், சதையுமாகக் கலந்த மனித உணர்வுகள், வகுப்பறையில் நேரடியாகக் கிடைக்கும். தற்போதைய சூழலில் ஆன்லைன் கல்வியே பாதுகாப்பானது.

குழந்தைகள் : தற்போது 9, 10, 11 ஆம் வகுப்புகளுக்குப் பள்ளிகளை திறந்தஅரசு, ஏன் எங்களுக்கான வகுப்புகளைத் திறக்கவில்லை?

ஆசிரியர் : இந்தக் கொரோனா காலத்தில், ஊட்டச்சத்தின் பங்களிப்பு முக்கியமானது. தற்போது பள்ளி செல்லும் அண்ணன், அக்காமார்களுக்கு ஓரளவு போதுமான சத்துக்கள் உள்ளன. ஆனால் குழந்தைகளாகிய உங்களுக்குக் குறைவாகத்தான் உள்ளது. மேலும் நீங்கள் பள்ளிக்குச் சென்றால் சக மாணவர்களுடன் சேர்ந்து விளையாடும் சூழல் ஏற்படும், குழுவாக இணையும்போது வைரஸ் தொற்று ஏற்படும், அதுமட்டுமில்லாமல் 10, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்குப் பொதுத்தேர்வு நடைபெறும் ஆதலால் அவர்கள் கண்டிப்பாகப் பள்ளிக்குச் செல்ல வேண்டும்.

குழந்தை 1 : முதல் கோவிட் தொற்றுக்கு காரணம் யார்?

குழந்தை 2 : சீனா.

குழந்தை 1 : இரண்டாவது தொற்றுக்கு காரணம் யார்?

குழந்தை 2 : அமெரிக்கா.

ஆசிரியர் : (இல்லை)... நாம்...தான் காரணம்.

ஏனென்றால், முதல் கோவிட் பரவலின்போது, நாம் கடைபிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகள் மற்றும் பாதுகாப்பு அறிவுரைகளைச்

ஆசிரியர் : சரிவரக் கையாளாத காரணத்தினால், இரண்டாவது அலைக்கு நாமே காரனமாயிற்றோம. இப்பொழுதாவது நாம் விழித்துக்கொண்டு, அரசால் இலவசமாகச் செலுத்தப்படும் தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள வேண்டும்



ஒரு நாடு முன்னேற வேண்டுமானால், கல்வியும், சுகாதாரமும் மிகவும் முக்கியம். ஆனால் இந்த இரண்டும் வசதியானவர்களுக்கு மட்டுமே கிடைக்கிறது. இது அனைவருக்கும் கிடைக்க வேண்டுமானால் அரசானது இலவச கல்வி, மருத்துவத்தை கொண்டுவர வேண்டும். இந்த வைரஸ் நம்மிடையே உள்ள சமூக வேறுபாட்டைச் சுட்டி காட்டியுள்ளது என்பதை மறுக்க முடியாது.

சிடார் (Centre for Education Development Action and Research-CEDAR) 1994ம் ஆண்டு சமூக ஆர்வலர்கள் மற்றும் கல்வியாளர்களால் நிறுவப்பட்டது. முதற்கட்டமாக குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பதற்காக சாத்தூர், சிவகாசி, கோவில்பட்டி, எட்டயபுரம் பகுதிகளில் 150 கிராமங்களில் பணியாற்றியது. இதனை தொடர்ந்து கல்வி கற்பது மட்டும் குழந்தை உரிமையல்ல, படைப்பாற்றல் கொண்ட முழுமையானக் கல்வியே குழந்தைகளின் உரிமை என்ற தொலைநோக்கு பார்வையுடன் செயலாற்றி வருகிறது. தூத்துக்குடி, மதுரை மாவட்டங்களில் குழந்தைகள் வள மையங்களை உருவாக்கி விளிம்பு நிலை சமுகத்தில் வசிக்கின்ற குழந்தைகளின் கல்வி, படைப்பாற்றல், கலை மற்றும் ஆளுமைதிறன்களை வெளிகொணர்ந்து, வலுபடுத்தி அவர்களை சமுக மைய நீரோட்டத்தில் பங்கேற்க வைக்கிறது. இது ஒரு புதிய விடியலுக்கான முயற்சி!





47/23, 'Thy Grace' Old Natham Road, Madurai-625 014

phone: 0452-2680701, Mobile: +91 95855 95855

E-Mail: info@cedarindia.org

Website:http://cedarindia.org